# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2476/10 - 2026 පෙබරවාරි මස 17 වැනි අඟහරුවාදා - 2026.02.17

2476/10 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: VE/DS/LA/AQ/WT/02.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2017/WS/137.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணயிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

| | | |
|---|---|---|
| மாகாணம் | : | வடக்கு |
| மாவட்டம் | : | யாழ்ப்பாணம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | தீவகம் தெற்கு, வேலணை |
| கிராம அலுவலர் பிரிவு | : | புங்குடுதீவு மத்தி மேற்கு - J/30 |
| கிராமம் | : | புங்குடுதீவு |
| கடத்திரல் வரைபட இல. | : | 910377 |
| மொத்த விஸ்தீரணம் | : | 0.0354 ஹெக்டயார் |
| காணி எடுத்தற்கான நோக்கம் | : | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு நீர்க் கோபுரம் அமைந்துள்ள காணிக்கு உட்செல்லும் பாதையை நிர்மாணிப் பதற்காக. |

01. **துண்டு இல. 1 - காணியின் பெயர்: ஆலி எழுவன் கலடு; விபரம்: பாதை; உரிமை கோருபவர்: திருநாவுக்கரசு சிவசாந்தினி; விஸ்தீரணம்: 0.0354 ஹெக்டயார்**

வடக்கு: வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு: ஆலி எழுவன் கலடு, தோட்டம், திருநாவுக் கரசு சிவசாந்தினி; தெற்கு: PPயா 2737 இல் காணித் துண்டு இல. 01 ; மேற்கு: காணியின் பெயர் அறிய




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை மற்றும் காணியின் பெயர் அறிய முடியவில்லை, தோட்டம், உரிமையாளரை அறிய முடியவில்லை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தீவகம் தெற்கு, வேலணை பிரதேச செயலாளர் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

த. அகிலன்,
பிரதேச செயலாளர்,
தீவகம் தெற்கு,
வேலணை.

பிரதேச செயலகம்,
தீவகம் தெற்கு,
வேலணை,
2026, பெப்புருவரி 12.

EOG 02 - 0138